செய்தி வெளியீடு எண்: 1043 நாள்: 27.11.2010

பத்திரிக்கைச் செய்தி

புகையிலை உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் கவனத்திற்கு

– – – –

மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ஜி.எஸ்.ஆர் (GSR) 182(E) நாள் 15.3.2008–ன்படி சிகரெட்கள் மற்றும் இதர புகையிலை தயாரிப்புகளுக்கான சிப்பம்** கட்டுதல் மற்றும் முகப்புச்சீட்டு விதிகள் 2008–ஐ அரசிதழில் வெளியிட்டதைத் தொடர்ந்து, 2009 மே திங்கள் 3–ஆம் நாளிட்ட அறிவிக்கை ஜி.எஸ்.ஆர்.305(E) நாள் 3.5.2009–ன்படியும் மற்றும் (எஸ்.ஓ.2815(E) நாள் 28.11.2008 நாளிட்ட அறிவிக்கையின்படியும், 31.5.2009 முதல் புகையிலை பொருட்களடங்கிய சிப்பங்களில் உடல்நலம் குறித்த எச்சரிக்கைகளை சட்டப்படியாக படம் வரைந்து விளக்குவது குறித்த விதிகளைக் கொண்டுவர திருத்தப்பட்டது. தற்பொழுது அரசிதழ் அறிவிக்கை ஜி.எஸ்.ஆர் 176(E) நாள் 5.3.2010-ல் கண்டுள்ள புதிய விளக்க விவர நல எச்சரிக்கைகளை ஜி.எஸ்.ஆர் (GSR) 411(E) நாள் 17.05.2010–ன்படி அனைத்து புகையிலைப் பொருட்களடங்கிய* சிப்பங்களிலும்** கட்டாயமாக காட்சிக்கு வைப்பதற்கு சிகரெட் மற்றும் பிற புகையிலைப் பொருட்கள் (சிப்பமிடுதல் மற்றும் முகப்புச்சீட்டு) திருத்த விதி 2010-ஐ, 2010 டிசம்பர் திங்கள் முதலாம் நாள் முதல் செயல்படுத்திட மத்திய அரசு குறித்திருக்கிறது.

குறிப்பிட்ட சுகாதார எச்சரிக்கைகள்




புகையிலை சிப்பங்களில் புகைக்கும் வடிவிலானவைகளுக்கு




புகையிலை சிப்பங்களில் மெல்லும் / புகைக்காத வடிவிலானவைகளுக்கு

சிகரெட் அல்லது ஏதேனும் இதர புகையிலை பொருட்களின் தயாரிப்பு, விநியோகம் இறக்குமதி அல்லது சிகரெட் விநியோகம் செய்வதில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும் சிகரெட் அல்லது இதர புகையிலை தயாரிப்பின் ஒவ்வொரு சிப்பத்திலும் மேற்சொன்ன அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி எச்சரிக்கை படங்கள் இடம் பெறுவதை உறுதி செய்யவேண்டும்.

உடல் நல எச்சரிக்கைகள் குறிப்பிட்ட பாங்கில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு புகையிலை சிப்பங்களில் பொறிக்கப்படவேண்டும் :–

- சிப்பத்தின் முன்புறத்தில் பார்வையில்படும் முக்கிய பகுதியில் குறைந்தபட்சம் 40% இடத்தில் பொறிக்கவேண்டும்.

- எச்சரிக்கை தகவல் சிப்பங்களின் மேற்புற மூலைக்கு இணையாக அமைந்திருக்க வேண்டும்.

- பார்வையில்படும் முக்கிய பகுதியில் இருப்பதைப்போல அதே திசையில் அமைந்திருக்க வேண்டும். இந்த சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்திட மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் குழுவினை அறிவிக்கை எஸ்.ஓ.1866 (E) நாள் 30.7.2009–ன் வாயிலாக அறிவித்துள்ளது.

| சிகரெட் சிப்பம் | பீடிகள் சிப்பம் | ஜுகா புகையிலை, மெல்லும் புகையிலை, மூக்குப்பொடி, பான்மசாலா சிப்பம் |
|---|---|---|
|  |  |  |

இது முதற்கொண்டு உற்பத்தி செய்யும் வாளாகத்தில் நிகழும் அனைத்து மீறல்கள் குறித்து மத்திய கலால் துறை ஆணையர்களின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் அமைந்துள்ள அந்தந்த உற்பத்தி அமைப்பு குறித்து முறையீடு செய்யப்பட வேண்டும். விற்பனையாளர் / விநியோகஸ்தர் நிலையிலான மீறல்களை உதவி ஆய்வாளரிடமோ அல்லது அதற்கு மேற்பட்ட காவல்துறை அலுவலரிடமோ / உணவு மற்றும் மருந்துத்துறை நிர்வாகம் / பிற அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களிடமோ, அதாவது, தொழிலாளர் நலத்துறை, தொழில்துறை, சிறுதொழில்துறை (அல்லது) விற்பனை வரி / சுகாதாரம் / போக்குவரத்து துறையிடம் முறையீடு செய்யலாம்.

இந்த சட்டத்தை மீறும் புகையிலை உற்பத்தியாளர்கள் / தயாரிப்பாளர்களுக்கு இரண்டு வருடங்கள் வரை நீடிக்கலாகும் சிறை தண்டனை அல்லது ரூ.5000/– வரை நீடிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்தும், இரண்டாவது முறையாக அல்லது தொடர்ந்து குற்றத்தீர்ப்புக்கு ஐந்து வருடங்கள் வரை நீடிக்கலாகும் சிறை தண்டனை மற்றும் ரூ.10,000/– வரை நீடிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதித்து தண்டிக்கப்படத்தக்க குற்றமென பொதுமக்களின் பார்வைக்கு கொண்டுவரப்படுகிறது. அதைப்போல விற்பனையாளரும் விநியோகிப்பாளரும் தண்டனைக்குள்ளாவார்கள். இந்த சட்டத்தை மீறும் விற்பனையாளர்களும் விநியோகிப்பாளர்களும் ஒரு வருடம் வரைநீடிக்கலாகும் சிறை தண்டனை அல்லது ரூ.1000/– வரை நீடிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனை விதிப்புக்கு ஆளாவார்கள். இரண்டாவது முறையாக அல்லது தொடர்ந்த தண்டனைத்தீர்ப்புக்கு இரண்டு வருடம் வரை நீடிக்கலாகும் சிறை தண்டனை மற்றும் ரூ.3000/– வரையிலான நீடிக்கலாகும் அபராதமும் விதிக்கப்படும்.

*இந்த சட்டத்தின்கீழ் வரும் புகையிலை தயாரிப்புகள் என்பது சிகரெட்கள், சிகார்கள், சுருட்டுகள், பீடிகள், புகையிலை சிகரெட், புகையிலை பைப் மற்றும் ஜுகா புகையிலை, மெல்லும் புகையிலை, மூக்குப்பொடி, பான்மசாலா அல்லது எந்தப் பெயரில் அது அழைக்கப்பட்டாலும் புகையிலை அதன் ஒரு பகுதியாக கலந்த மெல்லும் பொருள், குட்கா மற்றும் புகையிலை அடங்கிய பல்பொடி உள்ளடங்கும்.

** ''சிப்பம்'' என்பது நுகர்வோரிடம் விற்பனை செய்வதற்கான சிகரெட் மற்றும் இதர புகையிலை தயாரிப்புகளின் எந்த ஒரு வகையிலான பொட்டலம் என்பது ஆகும்.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**